# ஜோலார்பேட்டை நகராட்சி
## சாதாரண கூட்டம்

2021ம் ஆண்டு ஜீலை மாதம் 30.07.2021ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனிஅலுவலர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

**பொருள் எண்.1**

ஜோலார்பேட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பார்சம்பேட்டை இரயில்வே கேட் அருகில் நெடுஞ்சாலைதுறை மூலம் மேம்பாலம் அமைக்கபட்டு அதில் LED மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது நெடுஞ்சாலை துறை மூலம் மேம்பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள LED மின்விளக்குகளை நகராட்சி வசம் ஒப்படைக்க கடிதம் வரப்படுள்ளதால் கடிதம் எண் AEE(E)/VLR/ROB/2019-2020) 18.03.2020 இவற்றில் ஏற்படும் பழுதினை நீக்க அதற்கு உண்டான உதிரி பொருட்கள் வாங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாகஅனுமதி வழுங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/ /2021

**பொருள் எண்.2**

ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 அனுமந்த கவுண்டர் தெரு, முதல் குறுக்கு தெரு பகுதியில் இருக்கும் குடியிருப்பு பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் அமைக்க கோரி வரப்பெற்ற புகார் மனுவின் படி அப்பகுதியில் பொறியாளர் உடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனுமந்த கவுண்டர் தெரு கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டு உள்ளது. அப்பகுதியில் ஏற்கெனவே வடக்கு தெற்காக உள்ள அனுமந்த கவுண்டர் தெருவில் உள்ள கால்வாயில் இணைக்கப்பட வேண்டும். ஆனால் பள்ளமாக உள்ள அத்தெரு பகுதியினை கழிவுநீர் வெளியேறி எற்கெனவே உள்ள கால்வாய் உடன் இணைக்க அப்பகுதியில் கிராவல் மற்றும் வெட்மிக்ஸ்(Wetmix) கொண்டு பள்ளமாக உள்ள பகுதியினை சற்று உயரம் துக்கி கழிவுநீர் கால்வாய் மற்றும் அப்பகுதிக்கு சிமெண்ட தளம் அமைக்க வேண்டியுள்ளதால் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் நிர்வாகஅனுமதி வழுங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/604/2021

**<u>பொருள் எண்.3</u>**

இந்நகராட்சி உட்பட்ட ஜோலார்பேட்டை இரயில்வே சந்திப்பு பஸநிறுத்தம் அருகில் குற்ற சம்பவங்கள் நடக்காமல் தடுக்க வேண்டி காவல் துறையால் கண்காணிப்பு கேமரா (CCTV Camera) பொருத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் இரவு நேரங்கள் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினால் புதியதாக LED எல்.ஈ.டி மின்விளக்கு அமைத்துதர காவல்துறை கோரியதன்படி மேற்படி பணிக்கு தோரய செலவினம் தொகை ரூ.45,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.இ1/ 693 /2021</u>

**<u>பொருள் எண்.4</u>**

ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண் 17, சோலையூர் பகுதியில் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் உள்ள கதவு மற்றும் ஜன்னலுக்கு கொசு வலை, அமைக்க ஆகும் தோரய செலவினம் தொகை ரூ.50,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.இ1/ 690 /2021</u>

**<u>பொருள் எண்.5</u>**

ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண் 17. சோலையூர் பகுதியில் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் உள்ள கதவு மற்றும் ஜன்னல் பகுதியில் சீலை அமைத்தல் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், அமைக்கும் பணிக்கு தோரய செலவினம் தொகை ரூ.50,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண்.இ1/ 692 /2021</u>

**பொருள் எண்.6**

ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டுஎண்17. சோலையூர் பகுதியில் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் உள்ள வளாகத்தில் Girll gate அமைத்தல் பணி தோரய செலவினம் தொகை ரூ.50000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/ 691 /2021

**பொருள் எண்.7**

ஜோலார்பேட்டை நகராட்சி குப்பை கிடங்கில் சேதாரம் ஆகியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் அல்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு வாகனத்தின் மூலம் அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு எடுத்துச்செல்லும் பணிக்கு தேராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும், அரியலூர் அல்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு பிளாஸ்டிக் கழிவுகள் எடுத்துச்செல்ல விலைப்புள்ளி கோரியதில் 29.07.2021 ஆம் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம் | லாரி ஒன்றுக்கு தொகை |
|---|---|---|
| 1 | கிரின் சோசியாலிட்டி, ஜோலார்பேட்டை | ரூ.40,000/– |
| 2 | ஸ்ரீசீனிவாசன், எண்டர்பிரைசஸ், வாணியம்பாடி | ரூ.42,000/– |
| 3 | கலெக்டியுவ் ஆர்கனைசேஷன் ரூரல் எஜிகேஷனல் டிரஸ்ட், நாராயணபுரம், ஜோலார்பேட்டை | ரூ.44,000/– |

அலுவலக குறிப்பு :

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் கிரின் சோசியாலிட்டி, ஜோலார்பேட்டை என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.539/எச்1/2018

## பொருள் எண்.8

ஜோலார்பேட்டை நகராட்சி, வார்டு எண்.13, குடியானகுப்பம் பகுதியில் குடியானகுப்பம் கிராம சர்வே எண். 289/1A–ல் 3561.23 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு அமைக்க அனுமதிக்கோரி திரு.A.சிவா, ஏலகிரி கிராமம், திருப்பத்தூர் வட்டம் (ம) மாவட்டம் என்பவர் மனு மீது தல ஆய்வு மேற்கொண்டு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை, திருப்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.225/2021/திமா2, நாள்.30.06.2021 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.13.07.2021) தேதியில் உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்திற்கு Road Pattarn வரைப்படத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தேச மனைப்பிரிவு வரைப்படத்தின்படி அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி பொறியாளர் 29.07.2021 தேதிய குறிப்பில் தல ஆய்வு மேற்கொண்டு மனைப்பிரிவிற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளான தார்சாலை, மழைநீர் வடிகால்வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவை நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், தெருவிளக்கு வசதி செய்தபிறகு மனைப்பிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கலாம் என்றும் தற்போது வரைப்படத்தின்படி ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றின் நீளம், அகலம் அளவுகள், பரப்பளவு மற்றும் நான்குபுற எல்லைகள் குறிப்பிடப்பட்டு ஆணையாளர் ஜோலார்பேட்டை நகராட்சி என்ற பெயருக்கு தானப்பத்திரப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை தொடரலாம் சான்று அளித்துள்ளார் என்பதனை மன்றத்திற்கு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

### அலுவலக குறிப்பு

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்தின்படி ஒதுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது இடம் ஆகியவற்றின் நீளம், அகலம் அளவுகள், பரப்பளவு மற்றும் நான்குபுற எல்லைகள் குறிப்பிடப்பட்டு ஆணையாளர் ஜோலார்பேட்டை நகராட்சி என்ற பெயருக்கு பத்திரபதிவு செய்து ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.567/2021/எப்1

## பொருள் எண்.9

ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு 3ல் அமைந்துள்ள அனுமந்த கவுண்டர் தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/704/2021

## பொருள் எண்.10

இந்நகராட்சியின் சோலையூர் நீர் உந்து நிலையத்திலிருந்து குடிநீர் ஏற்றப்படும் கோடியூர், அசோக் நகர், வாலாட்டியூர், அனிபிரான் தெரு, இராமரெட்டியூர், ஜெயமாதா நகர் மற்றும் குடியானகுப்பம் பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளின் குழாய்களில் ஏர்வால்வு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/702/2021

## பொருள் எண்.11

ஜோலார்பேட்டை நகராட்சியின் வார்டு எண்.1 புதூர் தெற்கு தெரு, புதூர் மேற்கு தெரு, வார்டு எண்.12 அனிபிரான் தெரு, வார்டு எண்.7 திருப்பதிசாமி தெரு, வார்டு எண்.17 இராமரெட்டியூர், வார்டு எண்.13 குடியானகுப்பம் (திரியாலம் ரோடு) மற்றும் வார்டு எண்.6 நேதாஜி தெரு ஆகிய பகுதிகளில் புதியதாக குடிநீர் பைப்லைன் அமைக்கவும், வார்டு எண்.7 அம்பேத்கர் தெருவில் கழிவுநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/703/2021

**பொருள் எண்.12**

ஜோலார்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் "கொரோனா வைரஸ்" நோய் தொற்று 3–வது அலை பரவி வருவதை தடுக்கும்பொருட்டு தமிழக அரசு மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, அரசு முதன்மை செயலாளர் அவர்களின் D.O.Letter No.27887/P1/2021–1 Dated : 28.07.2021 (இவ்வலுவலக மின்னஞ்சல் கிடைக்கப்பெற்ற நாள்.30.07.2021) தேதிய நேர்முக கடிதத்தில் அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவித்துள்ள அறிவுரைகள் தொடர்பாக 01.08.2021 முதல் 07.08.2021 வரை 7 நாட்களுக்கு தொடர்ந்து கொரோனா நோய் தொற்று பரவி வருவது குறித்த நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் அச்சடித்து வீடுகள் மற்றும் கடைகளில் விநியோகம் செய்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, கொரோனா நோய் தொற்று குறித்த விழப்புணர்வு நோட்டீஸ் மற்றும் ஸ்டிக்க அச்சடிக்க தோராய செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேலும், நோட்டீஸ் மற்றும் ஸ்டிக்கர் அச்சடித்து வழங்க 30.07.2021 தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவரின் விவரம் | 10,000 எண்ணிக்கை நோட்டீஸ் அச்சடிக்க தொகை ரூ. | 100 எண்ணிக்கை ஸ்டிக்கல் அச்சடிக்க தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமலை பிரிண்டர்ஸ், எம்.எம்.எம்.ரெட்டி தெரு, ஜோலார்பேட்டை | ரூ.39,350/– | ரூ.4,500/– |
| 2 | மாருதி பிரிண்டர்ஸ், பார்த்தசாரதி தெரு, ஜோலார்பேட்டை | ரூ.37,850/– | ரூ.4,200/– |
| 3 | திருமகள் பிரிண்டர்ஸ், முனிசாமி நாயுடு தெரு, ஜோலார்பேட்டை | ரூ.38,600/– | ரூ.4,800/– |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள வ.எண்.2ன் மாருதி பிரிண்டர்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.277/2020/எச்1

ஜோலார்பேட்டை நகராட்சி

சாதாரண கூட்டம்

2021ம் ஆண்டு ஜீலை மாதம் 30.07.2021ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரண தீர்மானங்கள்

| வ.எண் | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 264 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 2 | 2 | 265 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 3 | 3 | 266 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 4 | 4 | 267 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 5 | 5 | 268 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 6 | 6 | 269 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 7 | 7 | 270 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொண்டும், அலுவலக குறிப்பு அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது |
| 8 | 8 | 271 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 9 | 9 | 272 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 10 | 10 | 273 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 11 | 11 | 274 | அலுவலக குறிப்பு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது |
| 12 | 12 | 275 | குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டும், அலுவலக குறிப்பு அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது. |

தனி அலுவலர்

ஜோலார்பேட்டை நகராட்சி